நேரம் ஆகும். இதை மாற்ற மரபு இயல் கூறுகளை மாற்றவேண்டும். அவ்வாறு மரபியல் கூறுகளை மாற்றினால் கோழிகள் ஒரு நாளைக்கு இரண்டு முட்டைகள் இடமுடியும். அவ்வாறு இடும் முட்டையின் ஓடு சற்று மெல்லியதாக இருக்கும். அதற்குண்டான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமானால் சுமார் 5 கோடி ரூபாய் செலவாகும். பயன்பெற இரண்டு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். அதனாலே இப்போது அதை நம்நாட்டில் செய்வதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 352, திரு. சி. ஞானசேகரன். இருக்கையில் இல்லை. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

352—

வடஆற்காடு — அம்பேத்கர் மாவட்டம், அமிர்திகாட்டில் உயிரியல் பூங்கா அமைத்தல்.

***19161** திரு. சி. ஞானசேகரன் :*

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு -அம்பேத்கர் மாவட்டத்தில் அமிர்திகாட்டில் பெரிய மிருகக்காட்சி சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் அமிர்திகாட்டில் ஏற்கனவே சிறிய அளவிலான உயிரியல் பூங்கா ஒன்று 1967 முதல் வனத்துறையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதைத் தவிர அமிர்தியைச் சுற்றியுள்ள காடுகள் நன்கு அடர்ந்து பரந்து விளங்குவதால், காட்டெருமை, புள்ளிமான், கடம்பை மான் போன்ற மிருக இனங்கள் தன்னிச்சையாக இயற்கைச் சூழலில் வாழ்ந்து வருகின்றன. எனவே வண்டலூரில் உள்ள திறந்த வெளி உயிரியல் பூங்காவினைப் போன்று பெரிதாக அமிர்தியில் உயிரியல் பூங்கா ஏற்படுத்தும் திட்டம் பரிசீலனையில் இல்லை. மேலும் போதிய வசதிகள் இல்லாததால் இதற்கான வாய்ப்பும் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமிர்தி காட்டைப் பார்க்க நூற்றுக்கணக்கான மக்கள் வந்து

1994 ஏப்ரல் 22]

போகிறார்கள். அங்கே பார்ப்பதற்கு இயற்கைக் காட்சிகள் மட்டும்தான் இருக்கின்றன. அங்கே ஒரு மிருகக் காட்சிச் சாலை அமைந்திருந்தால் மிக நன்றாக இருக்கும். மிருகக் காட்சிச் சாலை வைப்பதற்கு வேண்டிய இடம் வசதிகளும் தண்ணீர் வசதிகளும் இருக்கின்றன. வேலூரில் இருந்து 25 கிலோமீட்டரில்தான் அமிர்தி காடு இருக்கிறது. வேலூரில் சி.எம்.சி. மருத்துவமனைக்கு உலகநாடுகளிலே இருந்து பலபேர்கள் மருத்துவத்திற்காக வருகிறார்கள். ஆகவே அமிர்தி காட்டில் ஒரு மிருகக் காட்சிச் சாலை அமைத்தால் சரித்திர முக்கியத்துவம் பெறும். அமிர்தி காடு வளமும் வனமும் மிருகங்களும் நிறைந்த இடமாகும். ஆகவே அங்கே அதை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமிர்தி காட்டில் இருப்பது மிருகக் காட்சி சாலை தான். ஒரு சிறிய உயிரியல் பூங்கா தான். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது இயற்கை சூழலில் வைத்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதுபோன்று, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்று ஆண்டுதோறும் இங்கு சராசரி சுமார் 20 ஆயிரம் பேர் வருகிறார்கள். இவர்களிடமிருந்து அனுமதிக் கட்டணம் இதுகாறும் வசூலிக்கப்படவில்லை. இப்பூங்கா வேலூர் நகர பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு இடமாகவும், கல்வி அறிவுக்கு வகை செய்யும் இடமாகவும் அமைந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கு இருக்கிற பூங்காவில் 102 வகையான மிருகங்களும், பறவைகளும் வைத்து பாதுகாக்கப்படுகிறது. இந்த உயிரியல் பூங்காவில் சிறுத்தை, யானை, புள்ளிமான், கடம்பை மான், குரங்குகள், புனுகுப்பூனை, குள்ளநரி, முள்ளம்பன்றி, முயல் ஆகிய விலங்குகளும், இதைத்தவிர மலைப்பாம்பு, முதலை, ஆமை போன்ற மிருக இனங்களும், மயில், கிளி, புறா, காடை, கொக்கு போன்ற பறவை இனங்களும் பேணி பாதுகாக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமிர்தி காட்டைப் பொறுத்தவரையில் என்னுடைய போளூர் தொகுதி கணியம்பாடி ஒன்றியத்திலே வருகிறது. இந்த அமிர்தி காட்டில் கடந்த ஆண்டுகூட விண்டர் சீசனாக அங்கு சிறப்பு அம்சமாக ஒரு திருவிழா போல செய்து பல ஆயிரக்கணக்கான மக்கள், ஏறத்தாழ 50 ஆயிரம் மக்களுக்கு மேல் அங்கே வருகை தந்து, சிறப்பான முறையில் ஒரு மாத காலம் அங்கு சிறப்பு அம்சமாக கொண்டாடினார்கள்.

அதுமட்டுமின்றி, வேலூரிலிருந்து அனைவருமே அங்கு ஒரு சிறப்பான நிலையில் வருகை தந்து அனைவரும் கண்டு மகிழக்கூடிய ஒரு முக்கியமான இடமாக இருக்கிறது. இதனை மேலும் விரிவு செய்யும் வகையில் பல மிருகங்கள், பல மிருகக் காட்சிச் சாலைகளிலிருந்து கொண்டு வரப்பட்டு அங்கு சிறப்பான முறையில் செயல்படுத்தப்படுமா? அதேநேரத்தில் அங்கு பெரிய நீர்வீழ்ச்சி போல ஒன்று இருக்கிறது, அங்கு மக்கள் சென்று குளித்து வருவதற்கும் ரூம்கள் கட்டிக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் காட்டிலுள்ள மிருகங்களுக்கு கோடைக் காலங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க காட்டில் ஆங்காங்கே சிறு ஓடைகள் ஓடும் பகுதியில் ஓடைகளுக்குக் குறுக்கே தடுப்பு அணைகள் மற்றும் கசிவுநீர் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பகுதியில் காட்டிலுள்ள மான்களுக்கு என புல், தளை இவைகள் உற்பத்தி செய்ய தீவனப் பண்ணை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் ஒரு தகவல் மையமும், ஒரு நூலகமும் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளது. அதைத் தவிர்த்து நம்முடைய வண்டலூரில் மிகப் பெரிய ஒரு மிருகக் காட்சிச் சாலை இருக்கிற காரணத்தால் அதற்கு மேல் செய்வதற்கு போதிய வசதிகள் இல்லை என்பதும், எந்த வசதிகள் செய்ய வேண்டுமானாலும் மத்திய அரசினுடைய சில சட்டத் திட்டங்களுக்கு ஏற்ப தான் செய்ய இருக்கிற காரணத்தால் அதனுடைய அடிப்படையில் செய்ய வேண்டும். அப்படி செய்வதாக இருந்தால் இங்கே இருக்கிற நிதி நிலைமை போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு 2.1 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது போன்று இந்த ஆண்டும் அங்கு சராசரியாக 2 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். போதிய வசதி இல்லாதது தான் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 353, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. மா. சா. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

353—

சமூக நலக்காடுகளைப் பாதுகாக்க கிராம வனக்குழு அமைத்தல்.

***21697—** திரு. கே. கந்தசாமி :* மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலக்காடுகளைப் பாதுகாக்க கிராம அளவில் கிராம வனக்குழு அமைக்கப்படுகிறதா?